குரோஷியா



எனக்கு சத்தியத்தைக் காட்டும்

‘எனக்குச் சத்தியத்தைக் காண்பியும்’ என்று ஜெபிக்கத் தொடங்கினார்.

வாரநாட்களின் பிற்பகல் வேளைகளில், சாகிரேப் நகரில் அமைந்துள்ள சபை நூலகம் ஒன்றில் கூடுகிற மாணவர்கள் சந்தோஷமாக, கவனச்சிதறலில்லாமல் கற்றுக்கொள்கிறார்கள். அந்த இடம் பிரிலாஸ் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. அங்கிருந்த ஒரு சிறுபிள்ளைக்கு வீட்டுப் பாடங்களைச் செய்ய நிகா உதவுகிறார். பிறகு, “நாம் ஜெபிக்கலாமா?” என்று அன்பாகக் கேட்கிறார்.

ஒவ்வொரு வாரமும் பன்னிரண்டு மாணவர்கள் வரை அங்கு கூடுகிறார்கள், நிகா அவர்களுக்கு ஓர் ஆசிரியையாக மட்டும் இருக்கவில்லை. மாணவர்கள் சொல்வதை பொறுமையாகக் கேட்கிறார், ஊக்கப்படுத்துகிறார், அந்தச் சிறுவர்களின் இருதயங்களை தேவனை நோக்கி வழிநடத்துகிறார்.

ஒருநாள், ஒரு மாணவரின் தாயார் எதிர்பாராத விதமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்த சிறுவர்கள் மிகவும் கவலையடைந்தனர். “அவருக்காக நாம் ஜெபிப்போம்” என்று நிகா கூறினார். அவர்களும் ஜெபித்தார்கள். அதன் பிறகு, அந்தத் தாய் விரைவில் குணமடைந்தார்.

அங்குள்ள அன்பான சூழலைக் கண்டு, மகிழ்ச்சியடைந்த இன்னொரு பிள்ளை, “நான் வளர்ந்த பிறகு, இங்கே வேலை செய்ய விரும்புகிறேன்!” என்று சொன்னது.

இதுபோன்ற தருணங்கள் நிகாவை அதிகம் ஊக்குவிக்கின்றன. “நான் மிகவும் மனநிறைவோடும், இயேசுவுக்கு மிக நெருக்கமாகவும் உணர்கிறேன். பரிசுத்த ஆவி

யானவர் என்னை வழிநடத்துகிறார் என்பதை நான் அறிவேன்'' என்று கூறுகிறார்.

ஆனால் ஒரு சில ஆண்டுக ளுக்கு முன்பு, அவர் வாழ்ந்த வாழ்க் கையோ முற்றிலும் விதியாசமாக இருந்தது.

குரோஷியாவிலுள்ள பெரும் பாலான மக்களைப்போல, அந்த நாட்டின் பாரம்பரிய மதத்திலேயே நிகா வளர்ந்தார். ஆனால், தன்னு டைய வாலிப பருபவத்தில், அதை விட மேலான ஒன்றைத் தேட ஆரம் பித்தார். அவரது ஆன்மீக ஆர்வம் அவரை நவீனயுக போத னைகளுக் குள் வழிநடத்தியது. மறு பிறவி பற்றிய கருத்துக்களை ஆராய்வதற் காகவும், விரிவான சடங்குகளில் பங்கேற்பதற்காகவும் இந்தியாவுக் குக்கூட அவர் பயணம் செய்தார்.

''ஆனால் அதனாலும் பய னில்லை, எதுவும் மாறவில்லை. நான் பிரார்த்தனை செய்தேன், ஆனால் எல்லாமே அப்படியேதான் இருந்தது'' என்று அந்த அனுபவத் தைப் பற்றி நினைவுகூருகிறார்.

அங்கு காணப்பட்ட முரண் பாடுகள்தாம் அவருக்கு மிகப்பெரிய தடங்கலாக இருந்தன. ''அவர்கள் நல்ல விஷயங்களைப்பற்றிப் பேசி னார்கள், ஆனால் அவர்கள் அதன் படி வாழவில்லை'' என்று அவர் கூறுகிறார்.

ஏமாற்றமும் ஆவிக்குரியரீதி யில் கலக்கமும் அடைந்த நிகா, தனி மையுணர்வோடும், வாழ்க்கையில் அர்த்தமே இல்லை என்கிற நினை வோடும் குரோஷியாவிற்குத் திரும் பினார். பிறகு ஒரு நாள், வயதான ஒரு பெண்மணியைச் சந்தித்தார். அவர் நிகாவை ஆலயத்திற்கு வரும் படி அழைத்தார்.

அங்கே ஒரு வேதாகமத்தைக் கொடுத்தார்கள்.

அதை வாசிக்கத் தொடங்கிய போது, ஓய்வுநாள் சம்பந்தப்பட்ட விஷயம் அவருடைய கவனத்தை ஈர்த்தன. அது வேதவசனங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந் ததைக் கவனித்தார்.

''நீங்கள் ஏன் சனிக்கிழமை களில் ஆலயத்திற்குச் செல்வதில் லை?'' என்று போதகரிடம் கேட் டார்.

''அது முக்கியமல்ல, அந்த நாள் சாதாரண ஒரு நாள்தான்'' என்று அவர் பதிலளித்தார்.

ஆனால்தான் கண்டுகொண்ட விஷயத்தை நிகாவால் புறக்கணிக்க முடியவில்லை.

'அது சாதாரண ஒரு நாள் அல்ல' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்.

'எனக்குச் சத்தியத்தைக் காண் பியும்' என்று ஜெபிக்கத் தொடங் கினார்.

இணையத்தில் தேடிக்கொண் டிருந்தபோது, ஒரு யூடியூப் பக் கத்தை நிகா பார்த்தார். அதில் மறு பிறப்பு, சிருஷ்டிப்பு, வேதவசனங் களின் நம்பகத்தன்மை போன்று, ஒரு காலத்தில் தனக்கு விடை கிடைக்காமல் இருந்த விஷயங் களைப்பற்றிச் சொல்லப்பட்டிருந் தது. அதில் காட்டப்பட்ட விளக்கக் காட்சிகள் அவருக்கு மிகவும் அர்த்த முள்ளவையாக இருந்தன. அதைப் பேசியவர் ஒரு செவந்த்- டே அட்

வென்டிஸ்ட் என்றும், அவர் விரை வில் உள்ளூர் அட்வென்டிஸ்ட் சபை ஒன்றில் பேச உள்ளார் என்றும் நிகா அறிந்துகொண்டார். அதில் கலந்து கொள்ள முடிவு செய்தார்.

அங்கேயும், அவர் கேட்ட விஷ யங்கள் அவரது மனதில் ஆழமா கப் பதிந்தன.

அதற்கும் மேலாக, அங்கிருந்த மக்கள் அவரை அன்புடன் வரவேற் றனர். குறிப்பாக, அந்தச் சபையின் நூலகரான மிலேட்டா, ''கண்டு கொண்டேன் வேதாகம அஞ்சல் பள்ளியில் சேர விருப்பமா'' என்று அவரிடம் கேட்டார்.

''நான் பாடங்களை வீட்டில் இருந்தே படிக்கிறேன், நாம் வாரத் திற்கு ஒருமுறை கூடி ஆராய்ச்சி செய்யலாம்'' என்றார் நிகா.

ஒவ்வொரு முறையும் மூன்று முதல் நான்கு மணி நேரம் அவர் கள் ஒன்றாகப் படித்தனர். நிகா வுக்கு எலன் ஒய்ட்டின் புத்தகங் களை மிலேட்டா அறிமுகப்படுத்தி னார். நிகாவும் அவற்றை ஆர்வத் துடன் வாசித்தார். சத்தியமானது தெளிவாகவும், வேதாகமத்தின் அடிப்படையிலும், முரண்பாடுகள் இல்லாமலும் அவருக்கு வெளிப் படத் தொடங்கியது.

ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மனதிற்குள் உறுதி யாக உணர்ந்தார். அதற்காக, கடின மான ஒரு முடிவை நிகா எடுத்தார். ஓய்வுநாளில் வேலை ஏதும் இல்லா மல் இருப்பதற்காக, தனது வேலை யை விட்டுவிட்டு, ஒரு இரவு நேரக் காவலராக ஒரு வேலையில் சேர்ந் தார். நீண்டநேர, அமைதியான அந்த இரவுநேரப் பணி, படிக்கவும் சிந்திக்கவும் அவருக்குப் நேரத்தைக் கொடுத்தது.

இறுதியாக, இதுவரை தான் தேடி வந்த ஒன்றை அடைந்துவிட் டார்.

2023, டிசம்பர் 16 அன்று நிகா ஞானஸ்நானம் பெற்றார். வரலாற் றுச் சிறப்புமிக்க சாகிரேப் 1 திருச் சபை கட்டிடம் 2020ம் ஆண்டின் நிலநடுக்கத்தில் பலத்த சேதமடைந் திருந்ததால், மற்றொரு அட்வென் டிஸ்ட் திருச்சபையில் அவருடைய ஞானஸ்நான ஆராதனை நடைபெற் றது.

அவருடைய குடும்பத்தினர் இதில் கலந்துகொண்டனர். நீண்ட காலமாகத் தன்னை ஒரு நாத்திகர் என்று கூறிவந்த அவருடைய வளர்ப்புத் தந்தை, அதற்குப் பிறகு அவரிடம், ''நீ சரியான இடத்தில் தான் இருக்கிறாய்'' என்று கூறினார். சில வாரங்களிலேயே, அவர் கால மானார். நிகா அந்த வார்த்தைகளைத் தன் நெஞ்சில் பதித்துக்கொண்டு, தன் தாய் மற்றும் சகோதரர்களுக் காகத் தொடர்ந்து ஜெபித்து வரு கிறார்.

அவர் ஞானஸ்நானம் பெற்று ஆறு மாதங்களுக்குப் பிறகு, எதிர் பாராத ஒரு வாய்ப்பு வந்தது. கொரோனா பெருந்தொற்று காலத் தில், பள்ளி வகுப்புகளுக்குப் பிறகு மாணவர்களுக்கு உதவுகிற வகை யில் ஒரு பயிற்சி வகுப்பை ஆரம் பித்தார்கள். அது, 'பிரிலாஸ் பள்ளி' என்று அழைக்கப்பட்டது. அதற்கு ஓர் ஆசிரியை தேவைப்பட்டார். நிகா அப்பணியில் சேர்ந்தார்.